


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ ஜூன். 13, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 249 ❖ ரூ.10

சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்பட 37 அதிகாரிகள் மாற்றம்

# உத்தரவு

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (டிஎன்பிஎஸ்சி) பொறுப்பு தலைவராக முனியநாதன் ஐஏஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

**சென்னை, ஜூன். 13:**

**தமிழக உள்துறை செயலாளர் எஸ்.கே.பிரபாகர், சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட 37 ஐஏஎஸ் அதிகாரிகளை மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.**

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், பணீந்தர ரெட்டி உள்துறை செயலாளராகவும், உள்துறைச் செயலாளராக இருந்த எஸ்.கே.பிரபாகர் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய்நிர்வாக ஆணையராக மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சுகாதாரத்துறை செயலாளராக இருந்த ராதாகிருஷ்ணன் கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளராகவும், செந்தில் குமார் சுகாதாரத்துறையின் முதன்மைச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளராக நசிமுதீனும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளராக ஆனந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளனர்.



நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளராக பிரதீப் யாதவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண் இயக்குநராக தருமபுரி மாவட்ட ஆட்சியராக இருந்த திவ்யதர்ஷினி நியமிக்கப்பட்டுள்ளனர். திருச்சி மாவட்ட ஆட்சியராக இருந்த சிவராசு வணிக வரித்துறை கோவை பிரிவு இணை ஆணையராகவும், தென்காசி மாவட்ட ஆட்சியராக இருந்த கோபால் சுந்தர்ராஜ் வணிக வரித்துறை இணை ஆணையராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐஏஎஸ் அதிகாரி தீரஜ் குமார் , வணிக வரித்துறை முதன்மைச் செயலாளர் / ஆணையராகவும், ஐஏஎஸ் அதிகாரி தரேஷ் அகமது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐஏஎஸ் அதிகாரி நிர்மல்ராஜ், போக்குவரத்துத் துறை ஆணையராகவும், ஐஏஎஸ் அதிகாரி ஜெயகாந்தன், புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதீப் குமார் ஐஏஎஸ் திருச்சிமாவட்ட ஆட்சியராகவும், சாந்தி ஐஏஎஸ் தருமபுரி மாவட்ட ஆட்சியராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜானி டாம் வர்கீஸ் ஐஏஎஸ் , ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியராகவும், ஆகாஷ் ஐஏஎஸ் தென்காசி மாவட்ட ஆட்சியராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் அரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) தேர்வுகளை நடத்தி நிரப்பி வருகிறது. இதன் தலைவராக கடந்த 2020-ம் ஆண்டு முதல் பாலச்சந்திரன் ஐஏஎஸ் செயல்பட்டு வந்தார். இந்நிலையில் பாலச்சந்திரனின் பதவிக்காலம் கடந்த ஜூன் 9-ம் தேதியுடன் நிறைவடைந்தது.

பாலச்சந்திரன் ஓய்வு பெற்றதையடுத்து, தற்போது தேர்வாணையத்தின் உறுப்பினராக இருந்து வரும் முனியநாதன் ஐஏஎஸ் பொறுப்பு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை, முனியநாதன் பொறுப்பு தலைவராக செயல்படுவார் என மனிதவளத்துறை தெரிவித்துள்ளது.

சென்னையைச் சேர்ந்த சி.முனியநாதன் 2010 பேட்ச் ஐஏஎஸ். அதிகாரி. முதுகலை பொருளாதாரம் உள்ளிட்ட நிதி சார்ந்த படிப்புகளைப் பயின்ற, இவர் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியராகவும் இருந்துள்ளார். மேலும், ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர், தொழிலாளர் நலத்துறை ஆணையர் உட்பட பல்வேறு பொறுப்புகளையும் வகித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம், முனியநாதன், பேராசிரியர் ஜோதி சிவஞானம், அருள்மதி, ராஜ்மரியசூசை ஆகியோர் டிஎன்பிஎஸ்சியின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுக்கோட்டை நகரில்

# தேவையான இடத்தில் மட்டுமே வேகத்தடை அமைக்க வேண்டும்

## அரசுக்கு பேருந்து ஓட்டுநர் கோரிக்கை

**புதுக்கோட்டை , ஜூன். 13:**

புதுக்கோட்டை நகரில் தற்பொழுது வேகத்தடைகள் அகற்றப்பட்டு வாகனங்கள் சென்று வரும் நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வேகத்தடைகள் அமைக்கும்போது தேவையான இடங்களில் மட்டுமே வேகத்தடைகள் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

புதுக்கோட்டை பல்வேறு சிறப்புகளுடைய நகர அமைப்பை கொண்ட ஒரு நகரமாகும். புதுக்கோட்டை நகரம் பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரியை போல் தோற்றம் உடையவை. தொண்டைமான் மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் பார்த்து பார்த்து செதுக்கப்பட்ட நகரமைப்பு ஆகும்.

மக்களாட்சி பரிணாமத்தில் மன்னராட்சியின் மகத்துவம் செவிமடுக்காததால் பல்வேறு தொந்தரவுகளை இன்று நகர் வாழ் மக்கள் சந்தித்து வருகின்றனர். அது ஒருபுறம் இருக்கட்டும். புதுக்கோட்டை நகரில். பொது மக்களுக்கும் பொது போக்குவரத்து பணியாளர்களுக்கும் பல்வேறு இடர்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் சமீப காலங்களாக போக்குவரத்து காவல்துறை ஒன்று புதுக்கோட்டையில் இருக்கின்றதா? என்ற கேள்வியை முன் வைக்கும் அளவிற்கு போராட்டக்காரர்கள் கேட்கும் இடத்திலெல்லாம் சாலையில் வேகத்தடை அமைத்து இலவசமாக கிடைக்கும் பேரிக்கார்டர்களை சாலைகளில் நிறுத்திவைத்து நிர்வாக சீர்கேடுகளை ஏற்படுத்தி இருந்தனர்.

கடந்த புதன்கிழமை ஜூன் 8ம் தேதி புதுக்கோட்டைக்கு அரசு நிகழ்ச்சியில் பங்கேற்க வருகை தந்த தமிழக முதல்வரின் வருகையின் பயனாக ஒருவழியாக தேசிய நெடுஞ்சாலைகளில் அமைக்கப்பட்டிருந்த வேகத்தடைகள் அகற்றப்பட்டுள்ளது. இது பொது போக்குவரத்தை கையாளும் அரசுப் பேருந்து ஓட்டுநர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக அரசு பேருந்து ஓட்டுநர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், புதுக்கோட்டையில் மட்டுமில்லாது தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு வரை பொதுப்போக்குவரத்து துறைக்கு என்ன விதி வழங்கப்பட்டதோ அதுதான் இன்றுவரை கடைபிடிக்கப்படுகிறது. அதாவது எவ்வளவோ டெக்னாலஜிகள் நம் முன் இருந்தாலும் எங்களைப்போன்ற பேருந்து ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் கால நிர்ணயம் அப்படியே நீடிக்கின்றது அதனை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருந்தாலும் மக்கள் ஒத்துழைப்பு அளிப்பது குறைவாகவே இருக்கின்றது. திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு 59 கிலோமீட்டரை ஒன்றேகால் மணி நேரத்தில் கடக்க வேண்டும் ஆனால் அதற்கு சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருக்கின்றது.

ஒன்றரை மணி நேரம் வரை ஆகிவிடுகின்றது அதற்கு காரணம். டோல் பிளாசா மற்றும் நெடுஞ்சாலையில் போடப்பட்டுள்ள வேகத்தடைகள் பெரும் பாதிப்பாக இருக்கின்றது, குறிப்பாக கீரனூர் கடை வீதியைக் கடப்பதற்கு மட்டும் 15 நிமிடங்கள் வரை ஆகின்றது, இதனால் பேருந்தில் பயணிக்கும் பயணிகள் மாட்டுவண்டியை போல் பேருந்தை ஓட்டுவதாக தங்களை ஒருமையில் பேசுவதாகவும் அன்றைய நாள் முழுவதும் தங்களுக்கு மனவுளைச்சல் ஏற்படுவதாகவும் தெரிவிக்கும் அவர், ரயில்வே கிராசிங், ஏர் பின் பாயிண்ட், பள்ளிகள் உள்ளிட்டவற்றில் போடவேண்டிய வேகத்தடை அவற்றையும் தாண்டி டீக்கடைகள், தள்ளுவண்டி கடைகள் உள்ளிட்ட இடங்களிலும் வேகத்தடைகளை அமைத்து பொதுப் போக்குவரத்திற்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்து வருகின்றனர்.

தற்போது புதுக்கோட்டை நகரம் பொதுப் போக்குவரத்துக்கு ஏற்றதாக இருக்கின்றது. விரைவில் வேகத்தடை அமைப்பதற்கு முன்பு கள ஆய்வு செய்து இணைப்புச் சாலை பகுதியில் மட்டுமே வேகத்தடை அமைக்க வேண்டும் அதுதான் அனைவருக்கும் ஏற்றதாகவும் இருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். பல வருட குமுறலை அழுத்தம் திருத்தமாக தெரிவித்துள்ள பேருந்து ஓட்டுனர் கருத்தினை சம்பந்தப்பட்டதுறை அதிகாரிகள் உள்வாங்கிக்கொண்டு தேவையான இடத்தில் மட்டுமே வேகத்தடை அமைக்க வேண்டும் என்பதே புதுகை வரலாறின் எதிர்பார்ப்பு.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,835 | Rs.5,234 |

## வரலாற்றில் இன்று

1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

# திருமானூரில் அதிமுக கிளை செயலாளர்களுக்கு மினிட் புக் வழங்கல்

அரியலூர் ஜூன்.13-

திருமானூரில், அதிமுக கிளை செயலாளர்களுக்கு, மினிட் புக் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகே, முடிகொண்டான் கிராமத்தில் உள்ள, எஸ்.ஆர்.எம். திருமண மண்டபத்தில் நடைபெற்ற, திருமானூர் அதிமுக கிழக்கு ஒன்றிய கிளைக் கழக செயலாளர்களுக்கு மினிட் புக் வழங்கும் நிகழ்ச்சிக்கு, கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளர் தாமரை எஸ் .ராஜேந்திரன் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் வடிவழகன் வரவேற்று பேசினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெயங்கொண்டம் ராம ஜெயலிங்கம், மாவட்ட மாணவரணி செயலாளர் சங்கர், தங்க பிச்சமுத்து உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். திருமானூர் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளை கழக செயலாளர்களுக்கான மினிட் புத்தகத்தை வழங்கி, முன்னாள் அரசு தலைமை கொறடா மற்றும் அதிமுக மாவட்ட செயலாளருமான தாமரை எஸ்.ராஜேந்திரன் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், முன்னாள் திருமானூர் யூனியன் சேர்மன் சீனிவாசன், கீழக்காட்டாங்குறிச்சி சேட்டு என்கிற ராஜேந்திரன், திருமானூர் ஜம்பு, முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர் அன்பழகன், பிரித்திவிராஜ், சுள்ளங்குடி சேகர், பாளையப்பாடி மாரியப்பன், தமிழ்நாடு முருகானந்தம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் குருவாடி முருகேசன், உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முடிவில் கோவிலூர் சரவணன் நன்றி கூறினார்.






▶ புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அரிமளம் ஒருங்கிணைந்த காங்கிரஸ் கட்சி வட்டாரத் தலைவர் பதவிக்கு போட்டியிடும் ராம அர்ஜுனன் உள்கட்சி தேர்தல் அதிகாரி மோகன் பாபுவிடம் தனது வேட்பு மனுவை நேற்று தாக்கல் செய்தார். அருகில் மாவட்ட தலைவர் ராமசுப்புராம், வடக்கு மாவட்ட தலைவர் முருகேசன், மேலிட பார்வையாளர் ஜான் கென்னடி, பொதுக்குழு உறுப்பினர் முகமது இப்ராஹிம், மாவட்ட பிரதிநிதி மலைக்கொழுந்து உள்ளிட்ட பலர் உள்ளனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், சேரனூர் ஊராட்சி, கைவேலி பட்டியில் ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கலையரங்கத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று திறந்து வைத்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பொன்னமராவதி ஒன்றிய குழுத்தலைவர் சுதா அடைக்கலம் மணி, வட்டார வளர்ச்சி அலுவலர் சதாசிவம், தென்னலூர் பழனியப்பன், ஊராட்சி மன்றத் தலைவர் காமராஜ் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# புதுக்கோட்டையில் பிரபலமாகும் மூங்கில் பிரியாணி பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பு

**புதுக்கோட்டை ஜூன்.13-**

அசைவ உணவு பிரியர்களுக்கு பிரியாணி பேரைச் சொன்னாலே நாக்கில் எச்சில் ஊற தொடங்கும் பிரியாணிக்கு மயங்காத அசைவ உணவுப் பிரியர்களே கிடையாது என்று சொல்லலாம்.



பிரியாணி பல ரகசுவைகளில் வந்தபோதிலும் புதிதுபுதிதாக புதுவகை பிரியாணிகளை சமையல் கலைஞர்கள் உருவாக்கி வருகின்றனர். மட்டன், சிக்கன், மீன் பிரியாணி, வெஜிடபிள் பிரியாணி, பாசுமதி ரைஸ் பிரியாணி என பல ரகங்கள் உண்டு.

சமீபத்தில் நடைபெற்ற பிரபல நடிகை நயன்தாரா திருமணத்தில் பலாப்பழ பிரியாணி விருந்து பரிமாறப்பட்டு ட்ரெண்டிங் ஆனது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் சென்னை, கோவை, மதுரை, நெல்லை ஆகிய ஊர்களில் பிரபலமாகி உள்ள மூங்கில் பிரியாணி தற்பொழுது புதுக்கோட்டையில் பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. மூங்கில் பிரியாணி விற்பனை சக்கைபோடு போடுகிறது.

புதுக்கோட்டை திலகர் திடல் அடப்பன்வயல் அருகே அரசு கால்நடை பண்ணை அருகே ஒரு சிறிய கடையில் மூங்கில் பிரியாணி விற்பனை மதிய வேளையில் கமகம ருசியுடன் களைகட்டுகிறது.

மூங்கில் பிரியாணி பற்றி கடை உரிமையாளர் கூறும்போது மண்சட்டியில் செய்யப்படும் சமையல் எப்படி உடல் நலத்திற்கு ஆரோக்கியத்தை தருகிறதோ அதே அளவிற்கு இயற்கையில் விளையும் மூங்கிலில் பிரியாணி வேக வைக்கப்படும் பொழுது உடல்நலத்திற்கும் எந்த தீங்கும் ஏற்படுத்தாது குறிப்பாக பிரியாணி சாப்பிட்ட உடன் ஏற்படும் செரிமானப் பிரச்சனை நெஞ்செரிச்சல் வயிறு சமந்தமான எந்த தொந்தரவுகளையும் உண்டாக்காது. மேலும் தரமான மளிகை மசாலா பொருட்கள் இறைச்சி ஆகியவை கொண்டு தூய்மையான முறையில் மிகுந்த ருசியோடு தயாரிக்கப் படுவதால் நிறைய வாடிக்கையாளர்கள் சாப்பிட வருகின்றனர். நிறைய வாடிக்கையாளர்கள் பார்சல் வாங்கிச் செல்கின்றனர்.

ரூபாய் 100 விலையிலே மட்டன், சிக்கன் பிரியாணிகளை குறைந்த லாபத்தோடு வணங்கி வருகிறோம் ஒருமுறை எங்கள் உணவகத்திற்கு வந்து சாப்பிட்டு அதன் ருசியை உணருங்கள் என்று அழைக்கிறார் உரிமையாளர்.

## தமிழகத்தில் இன்று பள்ளிகள் திறப்பு

# முதல் ஒரு வாரத்துக்கு அனைத்து மாணவர்களுக்கும் புத்துணர்வு பயிற்சி

சென்னை ஜூன்.13-

தமிழகத்தில் 1 முதல் 10-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இன்று முதல் பள்ளிகள் திறக்கப்பட உள்ளன.



தமிழகத்தில் 1 முதல் 10-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இன்று முதல் பள்ளிகள் திறக்கப்பட உள்ளன. இதைத் தொடர்ந்து வருகிற 20-ந் தேதி பிளஸ்-2 வகுப்புகளும் 27-ந் தேதி பிளஸ்-1 வகுப்புகளும் தொடங்குகின்றன. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடைபெற்று வரும் நிலையில், பள்ளி வளாகம் மற்றும் பள்ளி வாகனங்களை முறையாக பராமரிப்பது உள்ளிட்டவை குறித்து வழிகாட்டு நெறிமுறைகளை பள்ளிக்கல்வித்துறை வழங்கியுள்ளது.

அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக் கூடங்களுக்கும் தமிழ்நாடு பாடநூல் கழகத்தில் இருந்து பாட நோட்டு புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. பள்ளிக்கூடங்கள் இன்று தொடங்கியதும் இலவச பாடப்புத்தகம் மற்றும் நோட்டுகளை வழங்க உத்தரவிடப்பட்டு உள்ளது. இந்த நிலையில் பள்ளிக் கூடங்களில் ஒரு வாரத்துக்கு பாடங்களை நடத்தாமல் புத்துணர்வு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. வகுப்புகள் தொடங்கப்பட்டு முதல் ஒரு வாரத்துக்கு பாடங்களை நடத்தாமல் புத்துணர்வு பயிற்சியும், நல்லொழுக்கம் மற்றும் உளவியல் ரீதியான வகுப்புகளும் நடத்துமாறு பள்ளிக்கல்வித்துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ஒரு வாரத்திற்கு பிறகு வழக்கமான பாடங்களை அட்டவணைப்படி நடத்தலாம் என்றும் கூறப்பட்டு உள்ளது.

# திருவண்ணாமலை அருகே ஸ்பீக்கர் பாக்ஸ் சரிந்து விழுந்து 3 மாத பெண் குழந்தை பலி

தி.மலை ஜூன்.13-

திருவண்ணாமலை அருகே தூங்கிக் கொண்டிருந்த 3 மாத பெண் குழந்தை மீது ஸ்பீக்கர் பாக்ஸ் சரிந்து விழுந்து பரிதாபமாக உயிரிழந்தது.

திருவண்ணாமலை அடுத்த சீலபந்தல் ஊராட்சிக்கு உட்பட்ட பிச்சானந்தல் பகுதியை சேர்ந்தவர் விஜய், கூலி தொழிலாளி. இவருக்கு 3 மாத பெண் குழந்தை உள்ளது. இந்நிலையில் குழந்தையை வீட்டில் தரையில் படுக்கவைத்து இருந்தார். அப்போது வீட்டின் பரணியில் உள்ள ஸ்பீக்கர் பாக்ஸ் எதிர்பாராத விதமாக சரிந்து தரையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் தலையில் விழுந்தது. இதில் குழந்தைக்கு படுகாயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது. இச்சம்பவம் குறித்து திருவண்ணாமலை தாலுகா போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மெல்லமெல்ல புதைந்து கொண்டிருக்கும் புதுக்கோட்டையின் வரலாறு மற்றும் கலாச்சாரம்

**புதுக்கோட்டை ஜூன்.13-**

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் பகுதியிலுள்ள தொண்டைமான் மன்னர்களின் குல தெய்வக் கோயிலாக பிரசித்தி பெற்ற கோகர்ணேஸ்வரர் ஸ்ரீ பிரகதாம்பாள் கோவில் எனப்படும் பெரிய கோயிலாகும்.



தொண்டைமான் மன்னர்களின் வம்சாவளியினர் பிரகதாம்பாள் தாஸ் என அடைமொழியுடன் சேர்த்து அழைத்துக் கொள்வார்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 200க்கும் மேற்பட்ட கோயில்களுக்கு தலைமை கோயிலாக விளங்குவது இந்த கோயில் தான் மேலும் இந்தக் கோயிலில் காமதேனு பசு சாபவிமோசனம் பெற பூவுலகில் சாதாரண பசுவாகப் பிறந்து இந்தக் கோவிலின் மூலவரான கோகர்ணேஸ்வரரை வழிபட்டதாக தல புராணம் கூறுகிறது.

இப்பேர்பட்ட சிறப்புகள் கொண்ட இந்த கோயிலானது ஒவ்வொரு காலகட்டத்திலும் படிப்படியாக தனது வரலாற்று சுவடுகளை மரபு சார்ந்த கலாச்சாரங்களை மெல்ல மெல்ல இழந்து கொண்டிருக்கிறது கடந்த காலகட்டங்களில் இந்த கோயிலுக்கு பிரம்மாண்டமான மூன்று தேர்கள் கோவில் வாசலில் நிறுத்தப்பட்டிருக்கும் ஆனால் தொடர்ச்சியாக கோவில் பணியாளர்கள் எண்ணிக்கை குறைந்தாலும் முறையான பாதுகாப்பு வசதி செய்யப்படாத தாலும் பிரம்மாண்டமான கம்பீரமான நுணுக்கமான கலையம்சம் மிக்க சிற்பங்களை கொண்ட 3 தேர்களும் சிதைந்து பாழாகி வீணாகி போனது இப்பொழுது ஒரே ஒரு தேர் மட்டும் எஞ்சியுள்ளது அந்த தேரும் சமீப காலத்தில் செய்யப்பட்டது.


இந்த 3 தேர்களுக்கும் 3 தேர் முட்டி இருந்து வருகிறது இந்த தேர் முட்டி மண்டபங்களும் வருடந்தோறும் தொடர்ச்சியாக தார்சாலைகள் போடப்பட்டு வருவதால் ரோடுகளில் உயரம் அதிகரித்ததால் மெல்ல மெல்ல தேர் முட்டி மண்டபங்கள் மண்ணில் புதைந்து வருகிறது இதனை பராமரிக்கவோ இந்த மண்டபங்களை செப்பனிடவோ இந்து அறநிலையதுறை அதிகாரிகள் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது பரிதாபத்துக்குரிய செய்தி மேலும் தேர் முட்டு அருகே உள்ள கலை நயமிக்க சிற்பங்களைக் கொண்ட மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலும் சாலை மட்டத்திலிருந்து தாழ்வான பகுதியாக மாறி மழை பெய்தால் கோவிலுள் நீர் செல்லும் வகையில் மாறி வருகிறது இந்த இரண்டு இடங்களையும் இந்து அறநிலையத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து மீட்டு புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் கோவிலுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என பக்தர்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு

# மாவட்ட ஆட்சித்தலைவர் ச.விசாகன் தலைமையில், விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம்

திண்டுக்கல் ஜூன்.13-

உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.விசாகன் தலைமையில் நடைபெற்றது. திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12-ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு ஜூன் 12-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதால், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜூன்-10ல் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஜூன்-10 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.விசாகன் தலைமையில் அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

அதன் தொடர்ச்சியாக, திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் நேற்று குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர். விசாகன் தொடங்கி வைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையாளர் சிவசிந்து, திண்டுக்கல் மாநகராட்சி தெற்கு மண்டல தலைவர் ஜான்பீட்டர், தேசிய குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்ட இயக்குநர் ஜெகதீஸ், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக திண்டுக்கல் கோட்ட மேலாளர் முகமது ராவுத்தர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக மேலாளர் (கணக்கு) முருகேசபாண்டியன், உதவிப்பொறியாளர் (பேருந்து நிலையம்) முனியாண்டி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மயிலாடுதுறையில் மாநில அளவில் நடைபெற்ற சிலம்பப் போட்டியினை

# திரைப்பட நகைச்சுவை நடிகர் தீனா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொடங்கி வைத்தனர்



மயிலாடுதுறை, ஜூன்13-

மயிலாடுதுறை அருகே சாய் விளையாட்டு அரங்கத்தில் மகாகவி சிலம்பம் அகடமி சார்பில் மாநில அளவிலான சிலம்பப் போட்டி நடைபெற்றது. இதில் திரைப்பட நகைச்சுவை நடிகர் தீனா மற்றும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார், நகர்மன்ற தலைவர் செல்வராஜ், நகர மன்ற உறுப்பினர் சர்வோதயன் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றனர்.

தொடர்ந்து குத்துவிளக்கேற்றி போட்டிகளை தொடங்கி வைத்தனர். ஜூனியர், சப் ஜூனியர், சீனியர் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் நடைபெற்ற இந்த போட்டியில் சென்னை, திருச்சி, மதுரை, சேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் தனித்திறன் மற்றும் தொடு முறை உள்ளிட்ட போட்டிகள் நடுவர் மேற்பார்வையில் நடைபெற்றன. இதில் ஏராளமான சிறுவர்கள் உட்பட பலர் பங்கேற்று தங்களது திறமையை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு தேசிய அளவில் நடைபெறும் சிலம்பாட்ட போட்டிகளுக்கு அவர்கள் தகுதி பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். நிகழ்ச்சியின் இறுதியில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# சீர்காழி அருகே பூம்புகாரில் 20 ஆண்டுகளுக்கு பின்பு சந்தித்த காவலர்கள்



சீர்காழி, ஜூன்13-

சீர்காழி அருகே பூம்புகாரில் 20 ஆண்டுகளுக்கு பின்பு சந்தித்த காவலர்கள். தமிழகம் முழுவதும் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட காவலர்கள் பங்கேற்று தங்கள் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த பூம்புகாரில் 2003ஆம் ஆண்டு பயிற்சி முடித்த காவலர்களின் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள காவலர் பயிற்சிப் பள்ளியில் 2003ஆம் ஆண்டு பயிற்சி முடித்த காவலர்கள் மற்றும் இதே ஆண்டு மற்ற பயிற்சி பள்ளியில் பயிற்சி முடித்த காவலர்கள் சந்திப்பு நிகழ்ச்சியானது பூம்புகாரில் நடைபெற்றது.

பயிற்சி முடித்து 20 ஆண்டுகள் நிறைவுபெறும் நிலையில் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் காவலர்கள் அனைவரும் பூம்புகாரில் ஒன்றிணைந்து தங்களது எண்ணங்களையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பூம்புகார் காவல் ஆய்வாளர் நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நாகை காவலர் பயிற்சிப் பள்ளியின் முன்னாள் பயிற்றுநர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியதுடன் காவலர்களுக்கு அறிவுரைகளையும் வழங்கினர்.

முன்னதாக 2003ஆம் ஆண்டு பயிற்சி முடித்து பணியில் இருந்து உயிரிந்த சக காவலர்கக்கு மௌன அஞ்சலி செலுத்தினர்.

# குத்தாலத்தில் பாலதண்டாயுதபாணி சுவாமி கோவிலில் விசாக நட்சத்திர பால்குட காவடி திருவிழா



குத்தாலம், ஜூன்.13:-

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் பஞ்சுக்கார செட்டித்தெருவில் பாலதண்டாயுதபாணி சுவாமி கோவில் அமைந்துள்ளது. இந்தக் கோவிலில் 58-வது ஆண்டு விசாகநட்சத்திர பால்குட காவடி திருவிழா நேற்று நடைபெற்றது.

இந்த காவடி விழாவில் குத்தாலம் காவிரி தீர்த்த படித்துறையில் இருந்து காவடிகள், அலகுகாவடிகள், பால்குடங்கள் புறப்பட்டு வாணவேடிக்கைகள், மேளதாளங்கள் முழங்க கோவிலுக்கு காவடிகள் வந்தடைந்தது.

அதனைத்தொடர்ந்து பாலபிஷேகம் மற்றும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். அதனைத் தொடர்ந்து மாலை சந்தனகாப்பும், சத்ருசம்ஹாரதிரிசிதி அர்ச்சனையும் நடைபெற்றது.

பின்னர் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் மற்றும் குகனடியார்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# மகாமாரியம்மன் கோவிலில் தீமிதி உற்சவம்



தரங்கம்பாடி, ஜூன்13-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா திருக்கடையூர் அருகேடி.மணல்மேட்டில் ஸ்ரீ மகாமாரியம்மன் கோவிலில் தீமிதி உற்சவம் நேற்று நடைபெற்றது.

திருக்கடையூர் அருகே டி. மணல்மேடு கிராமத்தில் ஸ்ரீ மகாமாரியம்மன் கோவிலில் தீமிதி திருவிழா கடந்த 3-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதனை தொடர்ந்து 8 தினங்கள் மகாமாரியம்மனுக்கு பல்வேறு வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் மாரியம்மனை பக்தர்கள் வழிபட்டனர். இதனையடுத்து நேற்று தீமிதி திருவிழாவை முன்னிட்டு மாலை 5 மணி அளவில் மார்கண்டேயர் கோவிலில் இருந்து கரகம் புறப்பட்டு, வாணவேடிக்கை மற்றும் மேளதாளம் முழங்க சாமி ஊர்வலம் கோவிலை வந்தடைந்தது.

தொடர்ந்து மாரியம்மனுக்கு பால், இளநீர், பன்னீர், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட பல்வேறு வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அம்பாள் காட்சி அளித்தார். இரவு 6 மணி அளவில் கோவில் முன்பு தீமிதி உற்சவம் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தீ மிதித்தனர். இரவு அம்மன் புஷ்ப பல்லக்கில் வீதி உலா நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை டி. மணல்மேடு கிராமத்தினர் செய்தனர். திருவிழாவை முன்னிட்டு பொறையார் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ் ♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



▶ உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், "ஊர் கூடி ஊரணி காப்போம் என்ற திட்டம்" மோரை ஊராட்சியில் உள்ள வீராபுரம் பேருந்து நிறுத்தம் பூங்கத்தம்மன் குளம் புனரமைத்தல் பணி மோரை ஊராட்சி மன்ற தலைவர் ஆர். திவாகரன் துவக்கி வைத்தார். உடன் ஊராட்சித் துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி செயலர் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்

# நாகை அருகே பொதுவழியை மறித்து வேலி அமைத்ததால் மக்களின் இயல்பு வாழ்கை பாதிப்பு



**நாகப்பட்டினம்: ஜூன்.13**

நாகை மாவட்டம் வேதாரணியம் தாலுக்கா கத்தரிபுலம் அருகே பொது வழியை மறித்து வேலி அமைத்தால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

இந்த சாலைவழியாக பொதுமக்களும். பள்ளி செல்லகூடிய மாணவ மாணவிகள் இந்தசாலையை தான் நம்பியுள்ளனர். இந்நிலையில் விவசாயம் மற்றும் வணிகசம்மந்தமாக இருந்த சாலை கடந்த எட்டு மாதங்களாக ஒரு சில சமுகத்திணரால் வேலி அமைக்கபட்டுள்ளது.

இந்த சாலையில் உள்ள வேலியை அகற்றி மீண்டும் சாலையைபயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு தமிழக அரசுக்கு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# குத்தாலம் அருகே செங்குடி அங்கன்வாடி மையத்தில் மெகா தடுப்பூசி முகாம்



குத்தாலம், ஜூன்.13:-

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், அசிக்காடு ஊராட்சி செங்குடியில் அங்கன்வாடி மையத்தில் மெகா தடுப்பூசி முகாம் நேற்று நடந்தது.

சுகாதாரத்துறை சார்பில் நடந்த இந்த முகாமில் அசிக்காடு துணை சுகாதார நிலைய செவிலியர் மீனாட்சி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தினார். இதில் அசிக்காடு, முருகன் தோட்டம், செங்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டுதங்களுக்குமுதல் மற்றும் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டனர்.

இதேபோல குத்தாலம் பேரூராட்சிக்குட்பட்ட பேரூராட்சி மன்ற வளாகம் சோழீஸ்வரர் நடுநிலைப்பள்ளி, மற்றும் பெருமாள் கோவில், கொழையூர், கோமல் உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளிலும் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

மயிலாடுதுறை அருகே

# முதலமைச்சரை தரக்குறைவாக விமர்சித்த ஸ்டுடியோ உரிமையாளர் கைது



**மயிலாடுதுறை, ஜூன்13-**

மயிலாடுதுறை மயூரநாதர் வீதியில் வசித்து வருபவர் விஜயராமன். இவர் விஜய் என்ற பெயரில் ஸ்டுடியோ நடத்தி வந்தவர். சிலகாலம் வெளியூரில் வசித்துவிட்டு மீண்டும் சோந்தஊர் திரும்பியுள்ளார். இந்நிலையில் இவர் தனது டுவிட்டர் பக்கத்தில் திமுக கட்சியை தரக்குறைவாக திட்டி திக, திமுகவினருக்கு கோயிலில் என்ன வேலை என்றும், தமிழகஅரசையும் தமிழக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை தரக்குறைவாக விமர்சித்து விஜயராமன் பெயர்கொண்ட டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இச்சம்பவம் மயிலாடுதுறை மாவட்ட திமுகவினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து மயிலாடுதுறை திமுகமுன்னாள் நகரமன்ற உறுப்பினர் மாசிலாமணி என்பவர் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் போலீசார் விஜயராமனை கைது செய்து அவர் மீது ஆபாசமாக பதிவிடுதல், சட்டம் ஒழுங்கை சீர் குலைப்பது, கொலை மிரட்டல் விடுத்தல் உள்ளிட்ட 6 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து மயிலாடுதுறை கிளை சிறையில் அடைத்தனர்.

கயிலாஷ் நினைவு அறக்கட்டளை சார்பில்

# அன்னதானம், இருதய பரிசோதனை, மகளிர் மருத்துவம், பொது மருத்துவ முகாம்



சென்னை, ஜூன்13-

சென்னை மாதவரம் அடுத்த செங்குன்றத்தைச் சேர்ந்த கே.கயிலாஷ் எம்பிஏ 3 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கயிலாஷ் நினைவு அறக்கட்டளை சார்பில் 500க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும், பிரசாந்த் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, சென்னை சோசியல், பாடியநல்லூர் லயன்ஸ் சங்கங்கள், பவானிநகர் குடியிருப்போர் நலச்சங்கம், மக்கள் மறுமலர்ச்சி மன்றம், ஸ்ரீபவானி அம்மன் ஆலய நிர்வாகம் இணைந்து இருதய பரிசோதனை, மகளிர் மருத்துவ, பொது மருத்துவ முகாமை செங்குன்றம் கயிலாஷ் இல்லத்தில் கயிலாஷ் நினைவு அறக்கட்டளை நிறுவனரும் தலைவரும் முன்னாள் ஒன்றியக் கவுன்சிலருமான பிஎன்கே. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதில்பாடியநல்லூர் ஊராட்சி 14வது வார்டு உறுப்பினர் கே.ராஜவேலு, பிஎன்கே. விக்னேஷ், அசோக், சிவகாளிஸ்வரன், மாறன், பவித், தரணி, கிரிதரன், தேவராஜ், சிவா மகேஷ், லட்சுமிபதி, கண்ணன், முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கேஆர்விஎஜுகேஷனல் டிரஸ்ட் நிறுவனர் கே.ஆர்.வெங்கடேசன் மற்றும் சமூக ஆர்வலர் பி.குமரன், செங்குன்றம் வீரம்மாகாளியம்மன் ராஜா சுவாமிகள், மட்டும் பல்வேறு கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# நாட்டின் முதல் தனியார் ரயில் சேவை கோவையில்தொடக்கம்



கோவை, ஜூன்13-

இந்திய ரயில்வே துறையின் முதல் தனியார் ரெயில் தமிழகத்தின் கோவையிலிருந்து தனது முதல் சேவையை தொடங்குகிறது.

இதுகுறித்து தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது: நாட்டின் முதல் தனியார் ரயில் சேவை ஜூன் 14ல் கோவையிலிருந்து மகாராஷ்டிராவிலுள்ள ஷீரடிக்கு இயக்கப்படுகிறது. இந்த ரயில் கோவையில் மாலை 6 மணிக்கு இந்த ரயில் புறப்படும். திருப்பூருக்கு 7 மணி ஈரோடு 8 மணி, சேலம் 9.15, (15.6.2022) அன்று ஜோலார்பேட்டை இரவு 00.10, எலகங்கா விடியற் காலை 5 மணிக்கும், தர்மாவரம் 6.20, மந்த்ராலயம் ரோடு 11.00 மணிக்கும், மாலை 4.00 மணிக்கு மந்த்ரா ரோட்டிலிருந்து புறப்பட்டு வாடி இரவு 7.15க்கும், சென்று ஜூன் 16-ம் தேதி காலை 7.25க்கு ஷீரடியை சென்றடையும்.

அதேபோல் 17.6.2022 அன்று காலை 7.25 க்கு ஷீரடியிலிருந்து புறப்பட்டு வாடி ரெயில் நிலையத்திற்கு மாலை 4.30 க்கும், தர்மாவரத்திற்கு இரவு 11.10க்கும், எலங்காவிற்கு 18.6.2022 காலை 2.10க்கும், ஜோலார்பேட்டைக்கு காலை 5.55க்கும், சேலம் 7.30க்கும், ஈரோடு 8.30க்கும், திருப்பூர் 10.25க்கும், கோவைக்கு நண்பகல் 12.00 மணிக்கு வந்து சேரும். இவ்வாறு தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது..

# தென்காசியில் தமிழ்நாடு அரசு எஸ்சி–எஸ்டி அலுவலர் நல சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம்



தென்காசி ஜூன்.13-

தென்காசியில் தமிழ்நாடு அரசு எஸ்சி-எஸ்டி அலுவலர் நல சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட தலைவர் ச. ஆசைத்தம்பிதலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆர். சதீஷ்குமார், மாவட்ட மகளிர் பிரிவு செயலாளர் எ.ஜெயா, மாவட்ட அமைப்பு செயலாளர் வே. ஜின்னா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி மாவட்ட செயலாளர் அனைவரையும் வரவேற்று பேசினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு எஸ்சி, எஸ்டி அலுவலர் நல சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.பி.ஜி. திலகர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு மழைகோட், செருப்பு, யூனிபார்ம், சோப்பு போன்ற அத்தியாவசிய மற்றும் உபகரணங்கள் வழங்க வேண்டும். கொரோனா, சுனாமி தாக்குதல், தானே புயல், வர்தா புயல், போன்ற இக்கட்டான நேரங்களில் உயிரையும் பணயம் வைத்து பணிபுரிந்த தூய்மை பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை ரூபாய் 15,000ம் உடனடியாக வழங்கவேண்டும். தூய்மை பணியாளர்களுக்கு கல்வி தகுதியின் அடிப்படையில் பணி உயர்வுவழங்கதமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். என தமிழக அரசுக்கு 15 கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

மேலும்இக்கூட்டத்தில் எஸ்சி-எஸ் டி, மாநில நிர்வாகிகள் நாகூர் பி. வேல்முருகன், எஸ். ஈஸ்வரன், எஸ். விமல் ராஜ், எல். நத்தன், எம். விஜய், பி.நாகராஜ், எம். கோவிந்தசாமி, சி. முனியாண்டி, டி.ரவி, எம். செல்வம், எஸ். வீரமணி, கலைச்செல்வி, எம். வேலுச்சாமி, கே.ந. சந்திரசேகரன், மாவட்ட நிர்வாகிகள் வெ. ஜின்னா, செ. ஹரிஹரன், எ. அருண்குமார், செ. மணிகண்டன், மு. ஜெகநாதன், தாசையா, எம். சண்முகவேல், வி. கணபதி, எம். பரமசிவன், மாரி, வி. எஸ். வேல்முருகன், எஸ். ராதாகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். தென்காசி மாவட்ட பொருளாளர் பி. வேல்முருகன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஆலங்குடி அருகே சித்தி விநாயகர் கோவில் வருடாபிஷேக விழா



ஆலங்குடி ஜூன்.13-

ஆலங்குடி அருகே உள்ள ஆலங்காடு சித்தி விநாயகர் கோயில் ஐந்தாம் ஆண்டு வருடாபிஷேக விழா பட்டி ஊரணி கரை கோவிலில் நடைபெற்றது.

ஆலங்குடி அருகே உள்ள ஆலங்காடு பட்டி ஊரணி கரையில் அமைந்திருக்கும் சித்தி விநாயகர் கோவில் ஐந்தாம் ஆண்டு வருடாபிஷேக விழா வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இதில் சிவாச்சாரியார்கள் யாகசாலை அமைத்து வேத மந்திரம் முழங்க சக்தி விநாயகருக்கு பால், பழங்கள், பன்னீர், புஷ்பம், இளநீர் அபிஷேகம்செய்யப்பட்டது. பின்னர் சித்தி விநாயகர் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது இதில் கிராம பொதுமக்கள் மற்றும் சுற்றுவட்டார கிராம பொதுமக்கள் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சித்தி விநாயகரை தரிசனம் செய்து சென்றனர். பின்னர் அனைவருக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. வருடாபிஷேக விழா ஏற்பாட்டை, ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி பகுதியில் மது விற்ற மூவர் கைது



ஆலங்குடி ஜூன்.13–

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, இலுப்பூர் பகுதியைச் சேர்ந்த மூக்கையா மகன் மருதமுத்து (72) ஆலங்குடி அருகே உள்ள வெண்ணாவல் குடியை சேர்ந்த ரெங்கசாமி மகன் குமார் (58). மற்றும் ஆலங்குடி அருகே உள்ள மேல கரும்பிரான் கோட்டையைச் சேர்ந்த குழந்தை மகன் விஜய் (42) ஆகியோர் திருட்டு மது விற்பதாக ஆலங்குடி போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கலைச்செல்வம் மற்றும் போலீசார் அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது திருட்டுத்தனமாக மது விற்ற மூவரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் ரொக்க மற்றும் மது பாட்டில்களை கைப்பற்றி ஆலங்குடி காவல் நிலையம் கொண்டு வந்து மூவர் மீது ஆலங்குடி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கலைச்செல்வம் வழக்கு பதிவு செய்து மேல் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆவுடையார்கோவில் அருகே ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வைகாசி திருவிழா



ஆவுடையார்கோவில் ஜூன்.13–

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் குறிச்சி குளம் என்னுமிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வைகாசி திருவிழா கடந்த 5ஆம் நாள் காப்பு கட்டுதலுடன் சிறப்பாக துவங்கப்பட்டது.

கடந்த ஒரு வார காலமாக ஆவுடையார் கோவிலை சுற்றி இருக்கின்ற சுமார் 50 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு விரதமிருந்து பால்குடம், சடல் காவடி, பறவைக்காவடி உள்பட பல்வேறு விதங்களில் நேர்த்திக் கடன்களை செலுத்தினர். ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு காப்பு கட்டுதல் நிகழ்ச்சி நடந்து 8வது நாளாக காவடி எடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஆவுடையார் கோவிலின் நான்கு வீதிகளிலும் அம்மன் வீதி உலா வரும் பொழுது பொதுமக்களுக்கு கஞ்சி வார்ப்பு நிகழ்ச்சியும், தீ மிதித்தல் திருவிழாவும். அதனைத் தொடர்ந்து புதன்கிழமை பாலி சுமக்கும் திருவிழாவும் நடைபெற உள்ளது.

# சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் தரைப்பாலத்தில் கார் மோதிய விபத்தில் தாய் மகன் பலி

சென்னை ஜூன்.13–

தரைப் பாலத்தில் கார் மோதி தாய்-மகன் பரிதாபமாக இறந்தனர். மனைவி படுகாயம் அடைந்தார்.

சென்னையை அடுத்த மேடவாக்கம் பகுதியை சேர்ந்தவர் ரவிச்சந்திரன் (45). இவர், தன்னுடைய மனைவி ராஜேஸ்வரி (40), தாய் கீதா (65) ஆகியோருடன் திருவண்ணாமலையில் நடந்த உறவினர் வீட்டு திருமண நிகழ்ச்சிக்கு சென்று விட்டு சென்னைக்கு காரில் வந்து கொண்டிருந்தார். காரை ரவிச்சந்திரன் ஓட்டி வந்தார். சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் 6 வழி சாலை விரிவாக்க பணி நடந்து வருகிறது.

பிள்ளைச்சத்திரம் அருகே நெடுஞ்சாலையில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட தரை பாலத்தின் இருபுறமும் பள்ளம் மூடப்படாமல் உள்ளது. அந்த பகுதியில் வாகனங்கள் வலதுபுறமாக திரும்பிச்செல்ல வேண்டும். ஆனால் ரவிச்சந்திரன் ஓட்டி வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து வலதுபுறம் திரும்பாமல் நேராக சென்று, புதிதாக கட்டிய தரைபாலத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் ரவிச்சந்திரன், அவரது தாய் கீதா இருவரும் உடல் நசுங்கி பரிதாபமாக இறந்தனர். ரவிச்சந்திரனின் மனைவி ராஜேஸ்வரி படுகாயம் அடைந்தார். அவர் ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது பற்றி சுங்குவார்சத்திரம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே

# விபத்தை ஆய்வு செய்தபோது மற்றொரு விபத்தில் சிக்கி 2 காவலர்கள் பலி



நாமக்கல் ஜூன்.13–

ராசிபுரம் அருகே விபத்து நடந்த இடத்தில் மீட்புப் பணியில் இருந்த போலீசார் மீது சுற்றுலா வேன் மோதியதில் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் போலீஸ்காரர் பரிதாபமாக இறந்தனர்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் அணைப்பாளையம் பிரிவு சாலை உள்ளது. இங்கு கடந்த சில மாதங்களாக மேம்பாலம் கட்டும் பணி நடந்து வருகிறது. அதையொட்டி இணைப்புச் சாலை அமைக்கப்பட்டு வாகன போக்குவரத்து நடந்து வந்தது. இந்த நிலையில் திருநெல்வேலியில் இருந்து ஓசூருக்கு சென்ற கார், வாகனங்களை இணைப்புச் சாலைக்கு திசை திருப்புவதற்காக வைக்கப்பட்டு இருந்த சிறிய இரும்பு டேங்கின் மீது மோதி விபத்துக்கு உள்ளானது. தகவல் அறிந்த ராசிபுரம் மற்றும் புதுச்சத்திரம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். மேலும் அந்த வழியாக சென்ற லாரி ஒன்றை, சாலையோரம் நிறுத்தி போலீசார் விசாரணை நடத்தி உள்ளனர். அப்போது லாரியின் பின்னால் நின்று கொண்டிருந்த போலீசார்கள் மற்றும் லாரியின் மீது, திருநள்ளாரில் இருந்து சேலம் மாவட்டம், இளம்பிள்ளைக்கு சென்ற சுற்றுலா வேன் ஒன்று அதிவேகமாக வந்து மோதியது.

இதில் புதுச்சத்திரம் போலீஸ் நிலைய சிறப்பு-சப் இன்ஸ்பெக்டர் சந்திரசேகர், ராசிபுரம் போலீஸ் நிலைய போலீஸ்காரர் தேவராஜன் ஆகியோர் படுகாயம் அடைந்தனர். போலீஸ்காரர் தேவராஜன் (37) சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். மேலும் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகர் (55) ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியிலேயே பலியானார்.

அதேபோல் இந்த விபத்தில் மற்றொரு போலீஸ்காரர் மணிகண்டன் மற்றும் சுற்றுலா வேனில் பயணம் செய்த 3 பேரும் காயமடைந்தனர். அவர்கள் 4 பேரும் ராசிபுரம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தகவல் அறிந்த நாமக்கல் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சாய்சரண் தேஜஸ்வி, ராசிபுரம் அரசு ஆஸ்பத்திரிக்கு நேரில் சென்று விபத்தில் பலியான போலீஸ்காரர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

மேலும் விபத்து குறித்து விசாரணை நடத்தினார். இதனிடையே விபத்தில் பலியான சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகருக்கு, வனிதா என்ற மனைவியும், ஹரிபிரசாத், பார்கவி என்ற மகளும் உள்ளனர். போலீஸ்காரர் தேவராஜனுக்கு, அமுதா என்ற மனைவியும், சுஜித் (8), மோஷிகா (6) என்ற மகளும் உள்ளனர். தேவராஜனின் மனைவி அமுதா மங்களபுரம் போலீஸ் நிலையத்தில் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், விபத்து குறித்து கேட்டறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து உயிரிழந்த காவலர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்குவதாக அறிவித்துள்ளார்.

மேலும், போலீஸாரின் குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு கருணை அடிப்படையில் இரண்டு அரசுப் பணி வழங்கிடவும், விபத்தில் காயமுற்று சிகிச்சை பெற்று வருவோருக்கு, உயர்தர சிகிச்சை வழங்கிடவும் முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.








மதுரை மாநகர மாவட்ட இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணியினர் பங்குபெறும் திராவிட மாடல் பயிற்சிப் பட்டறை கூட்டம் பசுமலையில் உள்ள கோபால்சாமி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட பொறுப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தளபதி தலைமை தாங்கினார். திராவிட இயக்க வரலாற்று திராவிட மாடல் பயிற்சிப்பட்டறையில் அரசு தலைமை கொறடா கோவி செழியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விளக்க உரையாற்றினார். இதில் திமுக நிர்வாகிகள் மாவட்ட செயலாளர் வேலுச்சாமி, மேயர் இந்திரா பொன் வசந்த், முன்னாள் மேயர் குழந்தைவேலு, சின்னம்மாள், துரைஎழில்விழியன், பாக்கியநாதன், மார்சல், முருகன், மிசா பாண்டி, வைகை பரமன், விஜயன், அக்ரினி கணேசன், தவமணி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நாளை அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்



சென்னை ஜூன்.13–

செயற்குழு, பொதுக்குழுவில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானங்கள் தொடர்பாக ஆலோசிக்க அதிமுக மாவட்டச்செயலாளர்கள் கூட்டம் நாளை நடைபெற உள்ளது.

அதிமுகவின் செயற்குழு பொதுக்குழு கூட்டம் வரும் 23-ஆம் தேதி காலை 10 மணிக்கு வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸ் மண்டபத்தில் நடைபெற உள்ளது. இந்த செயற்குழு பொதுக்குழுவில் அதிமுக சார்பில் நீட் தேர்வு விலக்கு, கச்சத்தீவு மீட்பு, சட்டம்-ஒழுங்கு பிரச்சனைகளுக்கு தீர்வு, மீண்டும் ஆட்சியில் அதிமுக உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

இந்நிலையில் நாளை அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் ஒருங்கிணைப்பாளர்கள் ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. செயற்குழு - பொதுக்குழுவில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய தீர்மானங்கள் மற்றும் அதிமுகவின் சட்ட விதிகளில் மேற்கொள்ளப்பட உள்ள திருத்தங்கள் தொடர்பாகவும் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது.

# திருச்சி அருகே மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் பெண் பலி




திருச்சி ஜூன்.13–

திருச்சி அருகே திருப்பராய்த்துறையில் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

திருச்சி மாவட்டம், ஜீயபுரம் அருகே உள்ள திருப்பராய்த்துறையை சேர்ந்தவர் ராமச்சந்திரன். இவருடைய மனைவி தனலட்சுமி(52). இவர் வீட்டில் உள்ள குப்பையை கொட்டுவதற்காக திருச்சி-கரூர் மெயின் ரோட்டை கடக்க முயன்றுள்ளார். அப்போது திருச்சியிலிருந்து கோயம்புத்தூருக்கு விராலிமலையை சேர்ந்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக மோட்டார் சைக்கிள் தனலட்சுமி மீது வேகமாக மோதியது.

இதில் அவர் தூக்கி வீசப்பட்டார். இதை பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு திருச்சி தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து தகவல் அறிந்து வந்த ஜீயபுரம் போலீசார் வழக்கு பதிவு செய்து தனலட்சுமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



திருவள்ளூர் அருகே மேல்நல்லாத்தூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் பிரைட் சேவா சங்கம் சார்பில் சிலம்பும் பயிற்சி நிறைவு விழாவில் மாணவர்களுக்கு மெடல் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சிக்கு பிரைட் சேவா சங்க தலைவர் முருகன் ஸ்ரீதர் அண்ணாதுரை மாறன் வார்டு உறுப்பினர் பரணிதரன் பயிற்சியாளர் தஷ்ணாமூர்த்தி மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்







புதுக்கோட்டையில் புகழ்பெற்ற ஸ்ரீ புவனேஸ்வரி தங்க மாளிகை உரிமையாளர் எஸ். நடராஜன் இல்ல திருமண விழாவில் மணமக்கள் விஜய் ஸ்ரீநாத், சுப்ரஜா (எ) மீனா ஆகியோரை தமிழக அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்பித்தனர். விழாவின் இறுதியில் மணமகள் குடும்பத்தார் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டதை படத்தில் காணலாம்.

# மல்லியங்குப்பம் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு ரூ.3 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி





ஊத்துக்கோட்டை, ஜுன்13–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி அருகே மல்லியங்குப்பம் ஊராட்சியில் தொடக்கப் பள்ளி ஒன்று உள்ளது. இப்பள்ளியில் சுமார் 75 மாணவர்கள் படித்து வருகின்றனர். ஜெயின் அமைப்பின் ஓசியன் வெல்பர் பவுண்டேஷன் என்ற அமைப்பின் சார்பில் இம்மாணவர்களுக்கு ரூ.3 லட்சம் மதிப்பில் டேபிள் சேர், எவர்சில்வர் தட்டு, டம்ளர், ஸ்கூல் பேக், பீரோ, ஃபேன் உள்ளிட்ட பொருட்களை வழங்கினர்.

நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் செல்வி பாலசுப்பிரமணி தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஆறுமுகம், ஆரணி பேரூராட்சி 15-வது வார்டு உறுப்பினர் எம்.குமார், முன்னாள் பேரூராட்சி துணை தலைவர் பாபு, பள்ளி தலைமை ஆசிரியர் நிர்மலா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஜெயின் அமைப்பின் தலைவர் கேவர்சந்த், செயலாளர் கமல்காந்தி, பொருளாளர் மோகன்லால் ஜெயின் ஆகியோர் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். மேலும், சிறப்பாக படித்து அதிக மதிப்பெண் எடுக்கும் மாணவர்கள் உயர்கல்வி படிக்க ஜெயின் அமைப்பின் சார்பில் தேவையான உதவிகளை செய்வதாகவும் உறுதி கூறினர். இந்நிகழ்ச்சியில் மங்கள் சந்த் ஜெயின், கிஷோர் ஜெயின், அசோக்ஜெயின், திலீப் ஜெயின், பன்னாலால் ஜெயின், மனோகர் ஜெயின், ராஜேஷ் ஜெயின், பி. ஜே.பி. சோழவரம் வடக்கு ஒன்றிய தலைவர் ஆர். ஆனந்தன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார்.

# காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவர் சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதி



புதுடெல்லி ஜூன்.13–

காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவர் சோனியா காந்தி கடந்த 2 ஆம் தேதி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டார்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு இருந்த காங்கிரஸ் இடைக்கால தலைவர் சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். டெல்லியில் உள்ள கங்காராம் மருத்துவமனையில் கொரோனா தொடர்பான உடல் நல பாதிப்புகளால் சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் ரந்தீப் சிங் சுர்ஜேவாலா தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். மேலும், சோனியா காந்தியின் உடல்நிலை சீராக இருப்பதாகவும் தொடர்ந்து மருத்துவர்கள் கண்காணிப்பில் இருப்பதாகவும் சுர்ஜேவாலா தெரிவித்துள்ளார். காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவர் சோனியா காந்தி கடந்த 2 ஆம் தேதி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டார். லேசான அறிகுறிகளுடன் தொற்று உறுதி செய்யப்பட்டு இருந்த சோனியா காந்தி வீட்டுத்தனிமையில் இருந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# புதுகையின் வரலாற்றை மறைத்துக் கொண்டிருக்கும் அதிகாரிகள்





# தமிழகத்தில் இன்று பள்ளிகள் திறப்பு ஒருவாரத்திற்கு புத்துணர்வு

# விபத்தை ஆய்வு செய்ய சென்ற காவலர்கள் விபத்தில் பலி




சென்னை / புதுக்கோட்டை | 13.06.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

வரலாறு நாளிதழ்

13.06.2022 திங்கள்

புதுமை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**ஜேம்ஸ் இரத்தினம்** , இலங்கைத் தமிழ் வரலாற்றாளர், நூலாசிரியர் (பி.1905) (இ.1988)



**ஏலங்குளம் மனக்கல் சங்கரன் நம்பூதிரிப்பாடு** , கேரளத்தின் 1வது முதலமைச்சர் (பி.1909) (இ.1998)



**யாழ்வாணன்** , ஈழத்து எழுத்தாளர் (பி.1933) (இ.1996)



**செர் பகதூர் தேவ்பா** , நேபாளத்தின் 32-வது பிரதமர் (பி.1946)



## இன்றைய நினைவு நாள்

**கோ. வேங்கடாசலபதி** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1909) (இ.1969)



**வி. கணபதி அய்யர்** , இந்தியக் கணிதவியலாளர் (பி.1906) (இ.1987)



**க. வெள்ளைவாரணனார்** , தமிழகத் தமிழறிஞர், தமிழிசை அறிஞர் (பி.1917) (இ.1988)

